01.04.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### அறுவடைக்குக் காத்திருக்கும் "சேலம் சன்னா': இயற்கை விவசாயத்தில் களமிறங்கிய பட்டதாரி இளைஞர்



தருமபுரியைச் சேர்ந்த பட்டதாரி இளைஞரின் இயற்கை விவசாயத்தில் முதல் முயற்சியாக பாரம்பரிய நெல் ரகமான "சேலம் சன்னா' தற்போது கதிர் முற்றி அறுவடைக்காகக் காத்திருக்கிறது.

தருமபுரி மாவட்டம், மாதேமங்கலம் ஊராட்சிக்குள்பட்ட குட்டூரைச் சேர்ந்தவர் அரங்கு. திருமாவளவன் (25). மின்னணுவியல் மற்றும் தொடர்பியலில் பட்டயம் பெற்று, இளங்கலை ஆங்கில இலக்கியம் முடித்தவர்.

சுற்றுச்சூழலில் ஆர்வம் கொண்ட இளைஞரான இவர், தனக்குச் சொந்தமான அரை ஏக்கர் நிலத்தில் பாரம்பரிய நெல் ரகமான "சேலம் சன்னா'வை கடந்த டிசம்பர் முதல் வாரத்தில் விதைத்தார். தருமபுரி மாவட்டத்துக்கு "சேலம் சன்னா' புதியது.

இப்போது சிறப்பாக கதிர் முற்றி அறுவடைக்காகக் காத்திருக்கிறது "சேலம் சன்னா'. ரசாயன உரங்களை முற்றிலும் தவிர்க்க திருமாவளவன், சாகுபடிக்கு நடுவே இயற்கைப் பூச்சி விரட்டியையும்கூடப் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடும்படியான விஷயம். அடுத்த வாரத்தில் அறுவடை செய்ய இருப்பதாகக் கூறும் திருமாவளவன் தற்போது தருமபுரியில் பாரம்பரிய அரிசி, சிறு தானியங்கள் உள்ளிட்டவற்றை விற்பனை செய்யும் சிறிய கடையையும் திறந்திருக்கிறார்.

இது குறித்து அவர் மேலும் கூறியது:

மறைந்த எனது தந்தை தமிழாசிரியர் அரங்கநாதன்தான் எனது விவசாய ஆர்வத்துக்குக் காரணம். எங்கள் குடும்பத்துக்கு இங்கே இரண்டரை ஏக்கர் நிலம் இருக்கிறது. முதல் முயற்சியாக "சேலம் சன்னா'வை அரை ஏக்கரில் மட்டும் சாகுபடி செய்து முடித்திருக்கிறேன். திருச்சியைச் சேர்ந்த சம்பத் என்பவர்தான் விதை நெல்லைத் தந்தவர். இயற்கை விவசாய முறைப்படியே சாகுபடி செய்வீர்களா? எனப் பல முறை உறுதி செய்த பிறகே 5 கிலோ விதை நெல்லைக் கொடுத்தார். தனது நிலத்தில் 100 நாள்கள் பயிராக அதை விளைவித்தவர் அவர். எனக்கு தற்போது ஏறத்தாழ 120 நாள்களைக் கடந்திருக்கிறது. கழனியைத் தயார் செய்வதற்காக எருக்கு, ஆத்தஅரளி போன்ற பால் வரும் செடிகளைப் போட்டு தழையுரமாக மிதித்ததுடன் சரி. நாற்றுவிட்டு, பயிர் விட்டதும் நட்டு முடித்தோம். தண்ணீர் விடுதலிலும் வழக்கத்தைவிட சிறப்பாக எதுவும் செய்யவில்லை. எங்கள் நிலத்தைச் சுற்றிலும் உள்ள நிலத்தில், ரசாயனப் பூச்சிகொல்லி மருந்துகளை வாரி இறைத்தபோது லேசான அச்சம் எழுந்தது. பூச்சிகளெல்லாம் நமது நிலத்துக்கு வந்துவிட்டால் என்ன செய்வது? என அச்சப்பட்டு, இயற்கை முறைப்படி சாணம், கோமியம், நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றை ஊற வைத்து பூச்சி விரட்டி தயார் செய்யவும் முற்பட்டேன். அதற்குள் பயிர் முற்றியது. என்ன ஆனாலும் பரவாயில்லை என விட்டு விட்டேன்.

எந்தப் பாதிப்பும் இன்றி "சேலம் சன்னா' நன்றாக விளைந்து தலை சாய்த்திருக்கிறது. பாரம்பரிய நெல் ரகங்கள், சிறு தானியங்கள்

தேவைக்கேற்ப விளைச்சல் இல்லாததால் மட்டுமே விலை அதிகமாக விற்கப்படுகிறது. எனது முயற்சி சிறிதேனும் மாற்றத்தைக் கொண்டு வரலாம்' என்கிறார் அரங்கு. திருமாவளவன் நம்பிக்கையுடன்!

## மழையும், மானியமும் இல்லாததால் பயறு வகை பயிர் சாகுபடி பரப்பளவு குறைந்தது

தேனி மாவட்டத்தில் கோடை மழை பெய்யாததாலும், அரசு மானியம் நிறுத்தப்பட்டதாலும், பயறு வகை பயிர் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது.

மாவட்டத்தில் 15 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. வழக்கமாக, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதம் 2 ஆம் போக நெல் அறுவடை முடிவடைந்த வயல்களில், பாசிப் பயறு, உளுந்து ஆகிய குறுகிய கால பயிர் சாகுபடி தொடங்கும். கடந்த ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் கோடை மழை பெய்ததால், 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயறு சாகுபடி நடைபெற்றது.

தற்போது, மாவட்டத்தில் கோடை வெயில் சுட்டெரித்து வருவதாலும், கோடை மழை பெய்யாததாலும், வயல்கள் வறண்டு காணப்படுகின்றன. இதனால், நெல் வயல்களில் அறுவடை முடிந்தும், பயறு வகை பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்ட முடியவில்லை. மேலும், நெல் வயல்களில் குறுகிய கால பயறு வகை பயிர் சாகுபடி செய்வதற்கு அரசு சார்பில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதவீதம் விதை மானியம் வழங்கப்பட்டது. தற்போது, சட்டப்பேரவைத் தேர்தல் விதியை முன்னிட்டு, விதை கிராமத் திட்டத்தின் கீழ் அரசு மானியம் ஒதுக்கீடு செய்யவில்லை என்று, விவசாயத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆழ்துளை கிணறு வசதி உள்ள இடங்களில் மட்டும் குறுகிய கால பயிர் விதைப்புக்கு ஆயத்தப் பணிகள் தொடங்கியுள்ளன. மழையும், மானியமும் இல்லாததால், இந்த ஆண்டு நெல் வயல்களில் பயறு வகை பயிர் சாகுபடி பரப்பளவு வெகுவாகக் குறையும் என்று விவசாயிகள் வருத்தம் தெரிவித்தனர்.

தேனி மாவட்டத்தில் கோடை மழை பெய்யாததாலும், அரசு மானியம் நிறுத்தப்பட்டதாலும், பயறு வகை பயிர் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது.

மாவட்டத்தில் 15 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. வழக்கமாக, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதம் 2 ஆம் போக நெல் அறுவடை முடிவடைந்த வயல்களில், பாசிப் பயறு, உளுந்து ஆகிய குறுகிய கால பயிர் சாகுபடி தொடங்கும். கடந்த ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் கோடை மழை பெய்ததால், 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயறு சாகுபடி நடைபெற்றது.

தற்போது, மாவட்டத்தில் கோடை வெயில் சுட்டெரித்து வருவதாலும், கோடை மழை பெய்யாததாலும், வயல்கள் வறண்டு காணப்படுகின்றன. இதனால், நெல் வயல்களில் அறுவடை முடிந்தும், பயறு வகை பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்ட முடியவில்லை. மேலும், நெல் வயல்களில் குறுகிய கால பயறு வகை பயிர் சாகுபடி செய்வதற்கு அரசு சார்பில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதவீதம் விதை மானியம் வழங்கப்பட்டது. தற்போது, சட்டப்பேரவைத் தேர்தல் விதியை முன்னிட்டு, விதை கிராமத் திட்டத்தின் கீழ் அரசு மானியம் ஒதுக்கீடு செய்யவில்லை என்று, விவசாயத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆழ்துளை கிணறு வசதி உள்ள இடங்களில் மட்டும் குறுகிய கால பயிர் விதைப்புக்கு ஆயத்தப் பணிகள் தொடங்கியுள்ளன. மழையும், மானியமும் இல்லாததால், இந்த ஆண்டு நெல் வயல்களில் பயறு வகை பயிர் சாகுபடி பரப்பளவு வெகுவாகக் குறையும் என்று விவசாயிகள் வருத்தம் தெரிவித்தனர்.

## ஆண்டிபட்டி பகுதியில் இயற்கை உரத்துக்கு மாறும் விவசாயிகள்: வேளாண் துறை ஊக்கப்படுத்துமா?

ஆண்டிபட்டி பகுதியில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்து வரும் விவசாயிகளை, வேளாண்மை துறை ஊக்கப்படுத்த வேண்டும் என, இயற்கை விவசாய ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆண்டிபட்டி வட்டாரம், ஆண்டிபட்டி ஒன்றியம் மற்றும் கடமலை-மயிலை ஒன்றியப் பகுதிகள் முழுவதும் விவசாயம் சார்ந்தவை. இப்பகுதியில், முருங்கை, கத்திரிக்காய், வெண்டை, வெங்காயம், பூ வகைகள் மற்றும் இலவம், முந்திரி என பல்வேறு வகை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

50 ஆண்டுகளுக்கு முன், பருவத்துக்கேற்றாற்போல் பயிர் செய்து, இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தியதால், போதிய மகசூலும், உடலுக்கு தீங்கில்லா விளை பொருள்களும் கிடைத்தன. இதனால், மக்களும் நோயின்றி வாழ்ந்தனர்.

ஆனால், இன்றைய நவீன காலத்தில் குறைந்த நாள்களில் அதிக மகசூல் பெறவேண்டும் என்ற நோக்கில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை அறிமுகம் செய்து வைத்து, ரசாயன உரங்களையும் வேளாண்மைத் துறை ஊக்குவித்து வருகிறது.

மேலும், அதிக மகசூல் பெறவேண்டும் என்ற தவறான எண்ணத்தில் அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக ரசாயன உரங்கள் மற்றும் மருந்துகளை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். இதனால், மண் மலட்டுத்தன்மை அடைந்து வருகிறது.

அது மட்டுமின்றி, மண்ணில் இடப்படும் ரசாயன உரங்கள் காற்று, நீர் மற்றும் ஆவியாதல் மூலம் வெளியேறி, பயிர்களுக்கு கிடைக்காத நிலையும் ஏற்படுகிறது.

எனவே, இயற்கை உரங்களான சணப்பு, தக்கைப்பூண்டு, மனிலா அகத்தி, சித்தகத்தி, கொளுஞ்சி, கற்றாழை, ஆவாரம் பூ போன்ற பசுந்தாள் உரங்கள் மற்றும் மண் புழு உரங்களை, இப்பகுதி விவசாயிகள் தற்போது பயன்படுத்தி வருகின்றனர். இந்த உரங்கள் மண்ணில் தங்கி மண்ணின் நீர் உறிஞ்சும் தன்மையை மேம்படுத்துகிறது. மேலும், பயிர்களின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தி, அதிக மகசூல் பெற உதவுகிறது.
தற்போது, இயற்கை உரங்களால் விளைவிக்கப்படும் விவசாயப் பொருள்களுக்கு கூடுதல் விலை கிடைப்பதால், விவசாயிகளிடம்

விழிப்புணர்வு ஏற்பட்டு இயற்கை விவசாயத்துக்கு மெதுவாக மாறி வருகின்றனர்.

இது குறித்து, இயற்கை சாகுபடி விவசாயி மகேந்திரன் கூறுகையில், ரசாயன உரங்களை பயன்படுத்துவதால் மண் மலட்டுத்தன்மை அடைகிறது. இதனால், பல ஆண்டு காலம் விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, இப்பகுதி விவசாயிகள் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மேலும், இயற்கை ரசாயன முறையில் விளைவிக்கப்படும் பொருள்களுக்கு கூடுதல் விலை கிடைக்கிறது. எனவே, இப்பகுதி விவசாயிகளுக்கு இயற்கை விவசாய சாகுபடி குறித்து வேளாண்மைத் துறையினர் வழிகாட்ட வேண்டும் என்றார்.

## வேளாண் தொழில் முனைவோருக்கு ரூ.14 லட்சம் மானியத் தொகை

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் தொழில் முனைவோருக்கு மத்திய அரசின் மானியத் தொகை ரூ. 14 லட்சம் புதன்கிழமை வழங்கப்பட்டது.

இதுகுறித்து வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில், இந்திய அரசின் அறிவியல், தொழில்நுட்பத் துறையின் ஆதரவுடன் தொழில்நுட்ப வணிக காப்பகம் செயல்படுகிறது. இதில் சுமார் 150 தொழில் முனைவோர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்த மையத்தில் உறுப்பினர்களாக உள்ள தொழில் முனைவோர், தனியார் தொழில் குழும நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோர், உணவு பதப்படுத்துதல், தென்னை, தென்னை நார் சார்ந்த பொருள்கள் தயாரிப்பு, அங்கக முறையில் காய்கறி, பழங்கள் உற்பத்தி, சேமிப்புக் கிடங்கு, கோழிக் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கு சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறை அமைச்சகத்தின் சார்பில் மானியத் தொகை வழங்கப்படும். அதன்படி, 2015 -2016- ஆம் ஆண்டுக்கான மானியத் தொகை ரூ. 14 லட்சம், மையத்தின் 7 உறுப்பினர்களுக்கு கிடைத்துள்ளது. இந்தத் தொகையை பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி, தொழில் முனைவோருக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக இயக்குநர் இரா.முருகேசன், உதவிப் பேராசியர் செந்தில்நாதன், வணிக மேலாளர் ஏ.ஞானசம்பந்தம் ஆகியோர் பங்கேற்றனர்.

## முருங்கைக் காய்களுக்கு பதிலாக விதைகள் விற்பதில் விவசாயிகள் ஆர்வம்

விலை குறையும் சமயத்தில் முருங்கைக் காய்களுக்கு பதிலாக முருங்கை விதைகளை தனியாக எடுத்து விற்பனை செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில், மூலனூர், தாராபுரம், காங்கயம் உள்ளிட்ட பகுதிகளில் முருங்கை விவசாயம் பிரதானமாக உள்ளது. குட்டை ரக மரமுருங்கை, நெட்டைச் செடி முருங்கை ரகங்கள் அதிக அளவில் உள்ளன. சந்தை நிலவரத்துக்கு ஏற்ப அதிகபட்சமாக கிலோ ரூ. 200, குறைந்தபட்சமாக ரூ. 3-க்கும் விலை போகிறது.

விலை குறையும் சமயங்களில், முருங்கைக்காய் பறிப்பதற்கான கூலி கூட கட்டுபடியாவதில்லை. எனவே, விவசாயிகள் இதற்கு மாற்று முயற்சியாக முருங்கைக்காய்களைப் பறிக்காமல், அதை முற்றவிட்டு, அதிலிருந்து விதைகளை எடுத்து விற்பனை செய்து வருகின்றனர். காய்ந்த முருங்கை விதைகள், எண்ணெய், மருத்துவப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

முருங்கை விதைகள் நேரடியாகவும், சந்தைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. விதைகள் சராசரியாக கிலோ ரூ. 300 முதல் ரூ. 600 வரை விற்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 3,500 மூட்டை பருத்தி ரூ.60 லட்சத்துக்கு ஏலம்

நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 3,500 மூட்டை பருத்தி ரூ.60 லட்சத்துக்கு ஏலம் போனது.

நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இந்த ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி என, மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 3,500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதில், ஒரு குவிண்டால் ஆர்.சி.எச்.ரகம் ரூ.4,486 முதல் ரூ.4,855 வரையும், டி.சி.எச். ரகம் ரூ.5,762 முதல் ரூ.6,489 வரையும், சுரபி ரகம் ரூ.4,489 முதல் ரூ.5,249 வரையும் ஏலம் போனது. மொத்தம் விற்பனைக்கு வந்த 3,500 பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.60 லட்சத்துக்கு ஏலம் போனது.

இப் பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்தனர்.

## சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஆலோசனை

கரூரில் நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை மாவட்டச் செயலர் எம். ராமலிங்கம் தலைமையில் புலியூரில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் கே. ராமசாமி, நிர்வாகிகள் பச்சநாச்சி,

அம்மையப்பன், அமராவதி சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க பொதுச் செயலர் ம. தென்னரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில் அமராவதி ஆற்றில் தொடர்ந்து சாயக்கழிவு நீர் கலப்பதைக் கண்டித்தும்,

சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை இழப்பீடு வழங்காததைக் கண்டித்தும் வரும் ஏப்.4-ம் தேதி ஆட்சியர் அலுவலகத்தில் குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை ஆகியவற்றை ஒப்படைக்கும் போராட்டம் நடத்தப்போவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போராட்டத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்துள்ளதையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

## தாமதமாகிறது பலா சீசன்!

பண்ருட்டி பகுதியில் சந்தைக்கு பலாப் பழங்கள் வரத்து குறைவாக உள்ளதால், இந்த ஆண்டு சீசன் தொடங்குவதில் தாமதம் ஏற்படலாம் என விவசாயிகள் கூறுகின்றனர்.

மாவட்டத்தில் பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி மற்றும் விருத்தாசலம் பகுதிகளில் சுமார் 3,500 ஏக்கர் பரப்பளவில் பலா மரங்கள் இருந்தன. 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட தானே புயலின்போது, ஏராளமான மரங்கள் சேதம் அடைந்தன. தற்போது சுமார் 3,000 ஏக்கரில் பலா மரங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இதில் பண்ருட்டி வட்டத்தில் மட்டும் சுமார் 2,000 ஏக்கரில் உள்ளன. இந்த மரங்கள் முந்திரிக் காடுகளுக்கு இடையிலும், வீட்டு தோட்டம் மற்றும் வயல் வரப்பு ஓரத்திலும் அதிகளவில் வளர்க்கப்படுகின்றன. இப்பகுதியில் ஆண்டுக்கு சுமார் 50,000 டன் அளவில் பலாப் பழங்கள் விளைகின்றன. இவற்றில் பெரும்பாலானவை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு பலா மரங்கள் தாமதமாக காய்க்கத் தொடங்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து காடாம்புலியூரைச் சேர்ந்த விவசாயி சரவணன் கூறியது: பொதுவாக பலா அறுவடை ஏப்ரல் மாதம் தொடங்கி ஜூன் மாதம் வரை தொடரும். மே மாதத்தில் அறுவடை உச்ச அளவில் இருக்கும்.

இந்த ஆண்டு பலா மரங்கள் தாமதமாகக் காய்க்கத் தொடங்கியுள்ளன. வளர்ச்சியும் குறைவாகவே காணப்படுகின்றன.

கடந்த நவம்பர் மாதம் பெய்த கனமழையின்போது பலத்த காற்று வீசியதில் பலா மரங்கள் ஆட்டம் கண்டன. இதனால் காய்ப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மரங்களில் போதுமான பிஞ்சுகள் இருந்தாலும், எதிர்பார்த்த சீசனில் பெரிதாகவில்லை என கவலையுடன் கூறினார்.

## பருத்தி மகசூலை பெருக்க விவசாயிகள் ஆர்வம்

காரைக்காலில் பல்வேறு இடங்களில் பருத்தி சாகுபடிப் பணியை விவசாயிகள் தொடங்கியுள்ளனர்.

காரைக்கால் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஆயிரம் முதல் 1,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

விழுதியூர், அகலங்கண்ணு, இளையான்குடி, புத்தக்குடி, நெடுங்காடு, கோட்டுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் பருத்தி சாகுபடி நடைபெறுகிறது. காரைக்காலில் தை மாத நெல் அறுவடைக்குப் பின்பு பருத்தி சாகுபடி தொடங்கியது.

பருத்தியைப் பொருத்தவரை நான்கரை மாத பயிர் என்ற நிலையில், சித்திரை மாத வாக்கில் பூ பூத்து, காய் காய்க்கும் பருவமெனவும், வைகாசி மாதத்தில் பஞ்சு எடுக்கும் காலமாக கூறப்படுகிறது. சரியான தருணமாகக் கூறப்படும் பூப்பூத்து, காய் காய்க்கும் பருவத்தில் கோடை வெயில் இருக்கும். வெயில் தொடர்ந்து இருந்தால் மகசூல் நிறைவாக இருக்கும் என்கின்றனர் விவசாயிகள். பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் பருத்தி, பூப்பூத்து காய் காய்க்கும் பருவத்தை தற்போது அடைந்துள்ளது. இதையடுத்து, மகசூலைப் பெருக்கும் வகையில் உரமிடுதல், இயந்திரம் மூலம் செடியை மணலால் அணைப்பு செய்யும் பணிகள் பெரும்பாலான இடங்களில் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதுகுறித்து பருத்தி விவசாயிகள் கூறியது: வழக்கமாக விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டே செடிக்கு மண் அணைப்பு செய்யப்படும். ஆள்கள் கிடைக்காததால், இயந்திரத்தைப் பயன்படுத்துகிறோம். இது

சில மணி நேரத்திலேயே பணிகளை முடிக்க உதவுகிறது. வேளாண் நிறுவனமான பாசிக் உழவரகத்தில் இருந்து தேவையான உரங்களை பெற்றுக் கொள்கிறோம்.

கடந்த ஆண்டைக் காட்டிலும் நிகழாண்டு பருத்தி மகசூல் அதிகமாக இருக்கும் என்றனர்.

## நெறியற்ற நடவடிக்கைகள்...

நெல் சாகுபடி ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. 2014-இல் ஹெக்டேருக்கு 8,400 கிலோ நெல் கிடைத்தது. 2015-இல் சம்பா, தாளடியில் சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு நெல் 5,980 கிலோ என்று குறைந்துவிட்டது. 2015-16க்கான சம்பா சாகுபடியில் 5,537 கிலோ என்று மீண்டும் குறைந்தது.

காவிரி டெல்டா பகுதியில் சாகுபடி பணிகள் தொடங்கும்போது மேட்டூர் அணை ஜூன் 12-ஆம் தேதி திறக்கவேண்டும். ஆனால், கடந்த பல ஆண்டுகளாக இந்த நாள்கள் தள்ளிப் போகின்றன. சில நேரங்களில் மேட்டூர் அணை திறப்பதில் சுணக்கமும் காட்டப்படுகிறது.

2012-இல் செப்டம்பர் 17-இல் தான் மேட்டூர் அணை திறக்கப்பட்டது. 2013-இல் ஆகஸ்ட் 2-இல் தான் திறக்கப்பட்டது. 2014-இல் ஆகஸ்ட் 10-இல் தான் திறக்கப்பட்டது. 2015-இல் ஆகஸ்ட் 9-ஆம் தேதிதான் திறக்கப்பட்டது. குறிப்பிட்டபடி ஜூன் 12-இல் திறக்காமல் தாமதமாக திறந்தால் நெற்பயிர்கள் வாடி விடுகின்றன.

கடந்த ஆண்டு மேட்டூர் அணை திறக்காமல் பயிர்கள் கருகின. இந்த ஆண்டு அதிக மழையால் பயிர்கள் அழுகிவிட்டன. ஆனால், காவிரி டெல்டாவில் சென்னை, கடலூர் போன்று பெரு மழைகள் இல்லாமலேயே வெள்ளக்கில் பயிர்கள் நாசமாகிவிட்டன. மழையில் பெய்த தண்ணீர் நீர்நிலைகளில் சேமிக்க முடியாமல் வேகமாக ஓடி கடலுக்குள் சென்றுவிட்டது. ஏனெனில், நீர்நிலைகளை தூர்வாரப்படவில்லை. காவிரிக் கரைகளும் சரியாக பராமரிப்பு செய்யப்படவில்லை.

காட்டாமணக்கு, ஆகாயத் தாமரை, நாணல், புல், கருவேல மரங்கள் நீர்

நிலைகளை ஆக்கிரமித்துக்கொண்டு நீர் இங்கு நிற்பதுமில்லை. சோழர் ஆட்சிக் காலத்தில் டெல்டா பகுதியில் ஆயக்கட்டை நிர்வகிக்க ஏரி வாரியம் இருந்தது. மூவேந்தர் காலத்தில் குறிப்பாக பாண்டியர் காலத்தில் கி.பி. 1785-இல் பங்குனி, சித்திரை மாதங்களில் கிராமத்து மக்கள் ஒன்று கூடி நீர் நிலைகளை தூர்வாரினர்; மதகுகளும், கதவுகளும் சரி செய்யப்பட்டன. சோழர் ஆட்சிக் காலத்தில் நடந்த மராமத்துப் பணிகளை உத்தரமேரூர் கல்வெட்டே சொல்கின்றது. அக்காலத்தில் ஊரில் பொதுவாக கணக்கில் இருந்த பொன், நெல், நிலம் போன்ற சொத்துகளை வைப்பீடாகக் கொண்டு, அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு குடி மராமத்துப் பணிகள் சிறப்பாக, செம்மையாக நடைபெற்றன.

திருச்சி-தஞ்சை மாவட்டக்தை வளப்படுத்துகின்ற உய்யக்கொண்டான் கால்வாய் இன்றைக்கும் விவசாயிகளின் கொடையாக அப்பகுதியில் உள்ளது. தொழில்நுட்பத்தோடு வெள்ளக் காலத்தையும் மனதில் கொண்டு வெட்டப்பட்ட கால்வாயாகும். அன்றைக்குக் கட்டிய கால்வாய் இன்றைக்கு தஞ்சை மாவட்ட டெல்டா பகுதிக்கு மூன்று நீண்ட வாய்க்கால்களாக அமைந்து பாசனத்திற்குப் பயன்படுகிறது. இந்த உய்யக்கொண்டான் முதல் நீட்டிப்பிற்கு 12 ஏரிகளும், இரண்டு, மூன்று நீட்டிப்புகளில் தலா 3 ஏரிகளும் ஆக மொத்தம் 18 ஏரிகள் உள்ளன. இந்த 18 ஏரிகளில் இதுவரை சரியாக தூர்வாரி மராமத்து செய்யவும் இல்லை. இதேபோன்று, புதியகட்டளை மேட்டு வாய்க்காலில் 105 ஏரிகள் இதுவரை தூர்வாரப்படவில்லை. பல ஏரிகள் தற்போது காணாமல் போய்விட்டன என்றும் செய்திகள் வருகின்றன. இம்மாதிரி பாசன நீர் மேலாண்மை நடவடிக்கைகளை செய்யாததால் காவிரி டெல்டா விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். தமிழகத்தில் மொத்தம் 39,202 ஏரிகள் உள்ளன. இதில் 13,699 ஏரிகள் தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. ஆனால், நடைமுறையில் 3,267 ஏரிகள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. இந்த நீர்நிலைகளை பாதுகாக்கவும் இல்லை. இதை, குடி மராமத்து செய்யவும் ஆட்சியாளர்களுக்கு மனமில்லை. இதைவிட வேறு என்ன பணிகள் அரசுக்கு இருக்கின்றனவோ தெரியவில்லை?

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்

-என்று மன்னனை வாழ்த்திய ஔவையார் காலத்தில், நீர்நிலைகளை அரசர்கள் எவ்வளவு கவனமாக கவனித்தார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன சொல்ல முடியும்?

நீர் நிலைகளை எல்லாம் ஆக்கிரமித்து கபளீகரம் செய்து அதை வீட்டு மனைகளாக்கி தங்களை வளப்படுத்திக்கொண்டார்கள் சமூக விரோதிகள். விவசாயிகள் பாதித்தால் நாடு பாதிக்கும் என்ற உணர்வே இல்லாமல் நீர் நிலைகள் பிரச்னையில் பாராமுகமாக இருப்பது மிகவும் கண்டனத்துக்குரியது. விவசாயி என்ன செய்வார்? பெய்தும் கெடுக்கிறது. காய்ந்தும் கெடுக்கிறது.

இயற்கையைக் குறை சொல்ல முடியாது. நீரைப் பயன்படுத்துவதில் சரியான அணுகுமுறை அரசிடம் இல்லை; நீர் மேலாண்மையும் சரியில்லை. காவிரியில் சுமார் 50}க்கும் மேல் தடுப்பணைகள் கட்டவேண்டும் என்ற திட்டங்கள் இருந்தும் பல ஆண்டுகளாக அரசு கவனிக்காமல் இருக்கிறது. மழைக்காலத்தில் பெய்கின்ற நீரை இந்த தடுப்பணைகளில் தேக்கி வைக்கலாம்.

கேரளா, குமரி மாவட்டத்தில் நெய்யாறு அணையை மூடிவிட்டது. அடவி-நயினார், உள்ளாறு, செண்பகத் தோப்பு, அழகரணைத் திட்டம், முல்லைப் பெரியாறு, பாண்டியாறு புன்னம்புழா, சிறுவாணி, என கேரளாவோடு இந்த நீர்நிலைகளுக்கு எல்லாம் மோத வேண்டி உள்ளது.

பி.ஏ.பி. என்று அழைக்கப்படுகின்ற பரம்பிக்குளம் - ஆழியாறு அணைத் திட்டம், கோவை, திருப்பூர் மாவட்டங்களுக்குப் பாசன மற்றும் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் அணை திட்டங்கள் ஆகும். 1958 நவம்பர் 9-ஆம் தேதி தொடங்கப்பட்ட இத்திட்டம் தமிழகம்-கேரளம் மாநிலங்களிடையே நதிநீர்ப் பங்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இதன் துணை நதிகளான தூணக்கனவு, பெருவாரிப்பள்ளம் ஆகியவை கேரள வனப்பகுதியில் அமைந்துள்ளன.

பிரதானமான பரம்பிக்குளம் அணை தமிழகப் பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு, கேரள மாநிலத்தின் பகுதியில் இருந்தாலும் தமிழக அரசுதான் பராமரிப்பு செய்கின்றது. இந்த திட்டத்தின் நீர்ப் பங்கீடு குறித்து கேரளமும், தமிழகமும் 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை அமர்ந்து பேசி மறு ஆய்வு செய்து ஒப்பந்தத்தை குறித்து ஆலோசனை செய்ய வேண்டும். ஆனால் தமிழகமும், கேரளமும் இதைச் சரியாக முறைப்படுத்தவில்லை.

கடந்த 1992-ஆம் ஆண்டு இரு மாநில அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது, கேரளப் பகுதியில் அமைந்துள்ள பரம்பிக்குளம் அணையை தங்கள் பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும்; தமிழ்நாட்டுக்குத் தேவையான தண்ணீரை தாங்கள் வழங்குவதாக கேரளம் கோரிக்கை வைத்தது. ஆனால், அணை பராமரிப்பு செலவை தமிழகம்தான் ஏற்கவேண்டும் என்ற நிர்பந்தத்தையும் ஏற்படுத்தியது.

படிப்படியாக, பரம்பிக்குளம் அணை யை கேரளம் தன்னுடைய கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர திட்டங்களைத் தீட்டி வருகிறது. இந்த அணையின் அருகே தமிழக அரசின் ஒப்புதல் இல்லாமல் 2013-ஆம் ஆண்டு கேரள அரசு தனது வனக் காவல் நிலையத்தை திறந்து அணைப் பகுதிகளைக் கண்காணிக்கத் தொடங்கியது. கடந்த ஜனவரி 16-ஆம் தேதி பரம்பிக்குளம் அணை மற்றும் துணை அணைகளின் பராமரிப்புப் பணிக்காகச் சென்ற தமிழக பொதுப்பணித் துறை அதிகாரிகளை அங்கு அனுமதிக்காமல் கேரள வனத்துறை திருப்பி அனுப்பியது.

மற்ற பிரச்னைகளான முல்லைப் பெரியாறு, குமரி மாவட்டத்தில் நெய்யாறு, நெல்லை மாவட்டத்தில் அடவி நயினார், உள்ளாறு, விருதுநகர் மாவட்டத்தில் செண்பகவல்லி-அழகர் அணை திட்டம், கோவை மாவட்டத்தில் பம்பாறு, சிறுவாணி போன்ற நீராதார பிரச்னைகளில் கேரளம் வம்பு செய்வதைப் போல பரம்பிக்குளம்-ஆழியாறிலும் பிரச்னை செய்யத் துவங்கிவிட்டது. தமிழக அரசின் கட்டுப்பாட்டில் பரம்பிக்குளம் அணை இருப்பதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள பட்டியலில் தெரிவிக்கப்பட்டும், கேரளம் வம்படி வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

இந்த பரம்பிக்குளம் திட்டத்தை கேரளம் முடக்கப் பார்க்கிறது. எப்படி காவிரி பிரச்னையில் ஒப்பந்தத்தை திரும்ப அமர்ந்து பேச முடியாமல் தள்ளப்பட்டதோ, அம்மாதிரியே திரும்ப 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை அமர்ந்து பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்தை ஆய்வு செய்யாமல் இருப்பது முறையற்ற நடவடிக்கையாகும். கேரள அரசை மத்திய அரசு கண்டிக்காமல் பாராமுகமாகவே இருக்கின்றது.

கவனத்தோடு கவனிக்க வேண்டிய தமிழக அரசும் கண்மூடித்தனமாக வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருப்பது வேதனையைத் தருகின்றது. தமிழகத்தின் நீர் ஆதார உரிமைகள் அண்டை மாநிலங்களால் பறிக்கப்படுவது நெறியற்ற வாடிக்கைதனங்களாகிவிட்டன.

கர்நாடகத்தோடு காவிரி, தென்பெண்ணை, ஒகேனக்கல் போன்ற நீர் ஆதாரப் பிரச்னைகள்; ஆந்திரத்தோடு பாலாறு, பொன்னியாறு, பழவேற்காடு ஏரி பிரச்னைகள் என்று தமிழகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கான தீர்வுகளை சரியான முறையோடு அணுகவில்லை என்பதுதான் வேதனையான விஷயம். எதிர்கால தமிழகம் இதனால் எப்படியெல்லாம் பாதிக்கப்படப் போகின்றதோ?

கட்டுரையாளர்:

வழக்குரைஞர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**விவசாயி ரோபோ!**



டீப் பீல்ட் ரோபோட்ஸ் என்ற நிறுவனம் விவசாய நிலத்தில் களை எடுப்பதற்காகவே ஒரு ரோபோவை உருவாக்கி இருக்கிறது. 'போனிரோப்' என்ற பெயருள்ள இந்த ரோபோவுக்கு இவை தான் களைகள் என்று அடையாளம் காட்டிவிட்டால் போதும். விளை நிலத்தில் மெல்ல உருண்டு சென்று, களைகளை அடையாளம் கண்டு அவற்றை மண்ணோடு நசுக்கி புதைத்து விடுகிறது. அதுவும் நொடிக்கு இரண்டு களைகளை துவம்சம் செய்யும் வேகம் போனிரோபோவிடம் உண்டு. விளை நிலத்தில் அது எங்கு இருக்கிறது என்பதை ஜி.பி.எஸ்., மூலம் தெரிந்து கொள்கிறது. களை பிடுங்கிவிட்டாலும் அதே இடத்தை சில முறை வலம் வந்து, தப்பிய களைகளையும் கண்டு புதைத்து விடுமாம் இந்த ரோபோ! இந்த ரோபோவால் ஆட்களுக்கு வேலை போகுமா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால், களைக்கொல்லிகளாக விளை நிலத்தில் கொட்டப்படும் வேதியியல் பொருட்களை பயன்படுத்த தேவை

இருக்காது என்று டீப் பீல்ட் ரோபோட்ஸ் சொல்கிறது. தஞ்சை தரணிக்கும், பொள்ளாச்சி, கோபிக்கும் போனிரோபோ வருமா?

---

## வேளாண்.பல்கலையில் மசாலா பொடி தயாரிக்கும் பயிற்சி

கோவை, : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிக்கும் பயிற்சி ஏப்ரல் 6 மற்றும் 7ம் தேதிகளில் நடக்கிறது. இதில் மசாலா பொடிகள், பாகற்காய் ஊறுகாய், தயார்நிலை பேஸ்ட், கத்திரிக்காய் ஊறுகாய், காளான் ஊறுகாய், வெங்காய ஊறுகாய், வாழைப்பூ ஊறுகாய் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படுகிறது. ஆர்வம் உள்ளவர்கள் ரூ.1500ஐ வேளாண் பல்கலையில் செலுத்தி தங்களது பெயரை முன்பதிவு செய்யலாம். பதிவு செய்ய ஏப்.5ம் தேதி கடைசி நாள். மேலும் விவரங்கள் அறிய 0422-6611340 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1 லட்சம் டன் நெல் 25,000 டன்னாக குறைந்தது

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப்பகுதியில் நடப்பாண்டு, 25 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி பாசனப்பகுதியில், 2015-16ல் தடப்பள்ளி- அரக்கன்கோட்டை பாசனப்பகுதியில், 18 இடங்களிலும், கீழ்பவானியில், 18 இடங்களிலும் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. பெரும்பாலான பகுதியில் அறுவடை முடிந்த நிலையில், இதுவரை, 25 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த காலங்களில், 1 லட்சம் டன் வரை நெல் கொள்முதலானது. இந்தாண்டு விவசாயிகளின் வங்கி கணக்கில் தொகை வரவு வைக்கப்பட்டது. இதனால் வியாபாரிகள், இருப்பு வைத்திருந்த பிற நபர்கள் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய முடியவில்லை. அதே சமயம் ஈரப்பதம்,

தூற்றி வழங்க வேண்டும், காத்திருப்பு, பணம் வழங்க கால தாமதம் போன்ற காரணங்களால் கொள்முதல் நிலையங்களை விவசாயிகள் தவிர்த்து விட்டனர். அதேநேரம், உண்மை விவசாயிகள் மட்டும், நெல்லை விற்பனை செய்து, இ.சி.எஸ்., மூலம் பணம் பெற்றுள்ளனர். இதுவே வரத்து குறைய காரணம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பாறு கழுகுகளை பாதுகாப்பது அவசியம்**

கூடலூர்; 'பாறு கழுகுகளை பாதுகாக்க, மக்கள் ஒத்துழைக்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டது.

ஊட்டி வடக்கு வன கோட்டம் மற்றும் 'அருளகம்' இயற்கை பாதுகாப்பு அமைப்பு சார்பில், மசினகுடியை ஒட்டிய எப்பநாடு, வாழை தோட்டம், சிறியூர், ஆனைகட்டி, பொக்காபுரம் கிராமங்களில், பாறு கழுகளை பாதுகாக்க வலியுறுத்தி, விழிப்புணர்வு கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

நிகழ்ச்சியில், படக் கண்காட்சியுடன், 'விதைகள்' கலை குழு சார்பில், நாடகம், பாட்டு, துண்டு பிரசுரங்கள் மூலம் பாறு கழுகுகளை பாதுகாக்க, பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பொக்காபுரத்தில் நடந்த நிகழ்ச்சியில், வனச் சரகர் ரமேஷ் பேசுகையில்,“பாறு கழுகுகள், சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவைகள் அழிந்து வருவதை தடுக்க, மாடுகளுக்கு வழங்கப்படும்'டைக்குலோபினாக்' மருந்தை புறக்கணிக்க வேண்டும். பாறு கழுகுகளை பாதுகாக்க, பொதுமக்கள், ஒத்துழைக்க வேண்டும்,” என்றார்.

இதற்கான ஏற்பாடுகளை, 'அருளகம்' இயற்கை பாதுகாப்பு அமைப்பின் செயலாளர் பாரதிதாசன், ஒருங்கிணைப்பாளர் அருணகிரிநாதன் செய்திருந்தனர்.

## களை கட்டுது பீன்ஸ் விவசாயம்

கோத்தகிரி: மாவட்டத்தில், தேயிலைக்கு அடுத்தப்படியாக, மலைக்காய்கறி பயிரிடப்படுகிறது. விதைத்த, 45 நாட்களில், மகசூல் தருகின்ற பீன்ஸ், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அதிக பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது.

கோத்தகிரி நெடுகுளா, மிளிதேன், வ.உ.சி., நகர், சுள்ளிகூடு மற்றும் கூக்கல்தொரை பகுதிகளில், நீர் ஆதாரம் உள்ள விளை நிலங்களில், நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்ப ளவில், விவசாயிகள் பீன்ஸ் பயிரிட்டு, பராமரித்து வருகின்றனர்.

வறட்சி நிலவுவதால், ஓடை அருகே கிணறுவெட்டி, பயிருக்கு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். பீன்ஸ் பயிரிட்டு, 30 நாட்கள் நிறைவடைந்த நிலையில், உரமிட்டு, களை எடுத்து பராமரிப்பு பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். குறுகிய கால பயிரான பீன்ஸ் வரத்து குறையும் போது, விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால், விவசாயிகள் கூடுதல் கவனத்துடன், பீன்ஸ் தோட்டங்களை பராமரித்து வருகின்றனர்.

## ரூ.1.18 கோடிக்கு பஞ்சு விற்பனை

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் நடந்த பருத்தி வாரச் சந்தையில், ஒரு கோடியே 18 லட்சம் ரூபாய்க்கு பஞ்சு விற்பனை நடந்தது.
கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி வாரச் சந்தை நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், தியாகதுருகம், சங்கராபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதியைச் சேர்ந்த 812 விவசாயிகள், 8,700 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.
திருப்பூர், சேலம், விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள், பஞ்சு மூட்டைகளுக்கு விலை நிர்ணயம் செய்தனர். சுவீன் பஞ்சு ரகம், ஒரு குவிண்டால், அதிகபட்சம் ரூ.5,989க்கும், குறைந்தபட்சம் ரூ.5,700க்கும் விலை போனது.

இதேபோல், எல்.ஆர்.ஏ., ரகம், ஒரு குவிண்டால், அதிகபட்சமாக ரூ.4,819க்கும், குறைந்தபட்சம் ரூ.4,369க்கும் விலை போனது. நேற்றுமுன்தினம், ஒரே நாளில், 8,700 பஞ்சு மூட்டைகள், ஒரு கோடியே 18 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

**மரிக்கொழுந்து சாகுபடியில் விவசாயிகள்... ஆர்வம் ஆறு மாதம் வரை பலன் தரும்**

ஆண்டிபட்டி:

கோடை வெயிலை தாங்கி வளரும் மரிக்கொழுந்து சாகுபடியில் ஆண்டிபட்டி விவசாயிகள் நாட்டம் செலுத்தி உள்ளனர். இது ஆறு மாதம் வரை பலன் தருவதாகும்.

ஆண்டிபட்டி அருகே மேலமஞ்சிநாயக்கன்பட்டி, கீழமஞ்சிநாயக்கன்பட்டி, சித்தார்பட்டி, கணேசபுரம், சேவாநிலையம், ராஜதானி உட்பட சில கிராமங்களில் மரிக்கொழுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஓரளவு தண்ணீர் சத்துள்ள செம்மண் நிலங்கள் இதற்கு ஏற்றதாக உள்ளது. மழை, பனிக் காலங்களில் மரிக்கொழுந்து செடிகள் கருகி விடும் என்பதால் நடவு செய்வதில்லை. கோடை துவக்கத்தில் நடவு செய்யப்படும் மரிக்கொழுந்து, ஒரு மாதத்தில் துவங்கி தொடர்ந்து ஆறு மாதம் வரை பலன் தரும்.

இப்பகுதியில் பறிக்கப்படும் மரிக்கொழுந்து பெருமளவு தேனி மட்டுமின்றி, மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களிலும் பூக்கள் கட்டுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

ஆர்டரின் பேரில் ஏஜென்சி மூலம் "எசன்ஸ்' தயாரிப்புக்கும் மொத்தமாக வாங்கி அனுப்பப்படும்.

பராமரிப்பு அவசியம்

விவசாயிகள் கூறியதாவது: மரிக்கொழுந்து சாகுபடியை விதை மூலமும், நாற்றுக்கள் மூலமும் துவக்கலாம். நடவுக்கு முன் நிலத்தை பண்படுத்துதல் முக்கியம். இயற்கை உரம் சிறந்ததாக இருக்கும். பாத்தி அமைக்கவும், நடவுக்கும் ஏக்கருக்கு ரூ. 70 ஆயிரம் வரை செலவாகும். நடவு செய்த ஒரு மாதத்தில் பறிக்கலாம்.

தற்போது மரிக்கொழுந்து கிலோ ரூ. 40 முதல் 50 வரை விலை போகிறது. ஒரு ஏக்கரில் நடவு செய்த பின், தரமான விளைச்சல் கிடைத்தால் முதல் மாதத்தில் 40 டன் வரை எடுக்க முடியும். அடுத்தடுத்த மாதங்களில் இன்னும் அதிகமாக கிடைக்கும். மரிக்கொழுந்து செடிகளை தொடர்ந்து பராமரிக்கவும் வேண்டும். வெயிலை தாங்கி வளரும் செடிகள், மழை பனிக்கு பாதிப்படைந்து விடும்.

"எசன்ஸ்' தயாரிப்புக்கு ஏஜென்சியினர் அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்வதில்லை. தற்போதுள்ள சூழலில் விளைச்சல் குறைவாக இருப்பதால், ஏஜென்சி மூலம் விற்பனைக்கு அனுப்பப்படவில்லை, என்றார்.

## கோடைமழையை எதிர்பார்த்து தயாராகும் விவசாயிகள்

ரெட்டியார்சத்திரம்:ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் போதிய மழையின்றி, நான்கு ஆண்டுகளாக விவசாய பணிகள் பெருமளவு முடங்கியுள்ளன. கடந்தாண்டு இறுதியில் பெய்த மழையால், தருமத்துப்பட்டி, கசவனம்பட்டி, கோனூர், அனுமந்தராயன்கோட்டை, நீலமலைக்கோட்டை, பலக்கனூத்து ஊராட்சிகளுக்கான குடிநீர் பிரச்னைக்கு ஓரளவு தீர்வு கிடைத்தது. சில குளம், கண்மாய்கள் நிரம்பியபோதும், பராமரிப்பற்ற சூழலால் அதிகளவு தண்ணீர் ஆவியாகி

வீணானது.ஒன்றியத்திற்கு உட்பட்ட பிற கிராமங்களில், சொற்ப மழைகூட இல்லாததால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். பருத்தி, மக்காச்சோளம் சாகுபடி செய்த விவசாயிகள், அதிக வெப்பத்தில் கருகியதால் பாதிப்படைந்தனர்.இரு வாரங்களாக,பகலில் வெயிலின்

தாக்கம் அதிகரித்து வருகிறது. மாலை நேரத்தில் அவ்வப்போது மேகமூட்டம் காணப்பட்டபோதும், மழை இல்லை. இருப்பினும், விவசாயிகள் பலர் சாகுபடிக்கான பணிகளுக்காக ஆயத்தமாகி வருகின்றனர். மாங்கரை, கதிரையன்குளம், எம்.அம்மாபட்டி, டி.புதுப்பட்டி, கரிசல்பட்டி பகுதிகளில், உழவுப்பணிகள் மும்முரமாக நடக்கின்றன.

**காய்கறி பயிர்களுக்கு "வெல்கம்' வாழைச் சாகுபடிக்கு "குட்பை'**

கம்பம்:மாவட்டத்தில் கடும் வெப்பம் நிலவுவதாலும், கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து வருவதாலும் வாழைச் சாகுபடி செய்ய முடியாத நிலை எழுந்துள்ளது. மாறாக விவசாயிகள் காய்கறி பயிர்கள் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.மாவட்டத்தில் பலமாதமாக மழை இன்றி, தொடர்ந்து கடும் வெப்பம் நிலவுவதால் குடிப்பதற்கும், விவசாயத்திற்கும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுது.தோட்டக்கலை மாவட்டமான தேனியில் வாழை, திராட்சை, மா, கொய்யா, காய்கறி பயிர்கள் அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் வாழைக்கு தண்ணீர் அதிகமாக தேவைப்படும். மாவட்டத்தில் குறைந்தது 10 ஆயிரம் எக்டர் பரப்பில், நேந்திரன், ஜி 9, செவ்வாழை, நாழிப்பூவன், பச்சை, பூவன் என பல ரகங்கள் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. மழை இல்லாததால் கிணறுகளில் நீர் மட்டம் மளமளவென குறைந்து வருகிறது. இதனால் வாழைச் சாகுபடிக்கு விவசாயிகள் குட்பை சொல்லத் துவங்கியுள்ளனர்.

அதற்கு பதிலாக குறைந்த அளவு தண்ணீர் தேவைப்படும் பீட்ரூட், முள்ளங்கி, கொத்தமல்லி போன்ற பயிர்களை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். தோட்டக்கலைத்துறையினர் கூறுகையில், ""வாழைக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. ஆனால் தண்ணீர் இல்லாததால் அதனை சாகுபடி செய்ய விவசாயிகள் தயங்குகின்றனர். மாறாக காய்கறிப் பயிர்களை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். மயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, அணைப்பட்டி, ராயப்பன்பட்டி ஆனைமலையன்பட்டி போன்ற பகுதிகளில் காய்கறி பயிர்கள் சாகுபடி அதிகரித்து வருகிறது," என்றனர்.

## வறட்சியின் தாக்கத்தால் பாதிப்பில் கால்நடைகள்

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி பகுதியில் ஏற்பட்டுள்ள வறட்சியின் தாக்கம் கால்நடைகளின் குடிநீர், தீவனத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆண்டிபட்டி பகுதியில் நூறுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் விவசாயம் சார்ந்த தொழில் மட்டுமே செய்து வருகின்றனர். மழை பெய்தால் மட்டுமே விவசாயம் என்ற நிலையில் நூற்றுக்கணக்கான ஏக்கர் மானாவாரி நிலங்களில் சில மாதங்களே விவசாய பணிகள் செய்ய முடியும். நிலத்தடி நீர் மட்டமும் ஒவ்வொரு ஆண்டும் சரிந்து வருவதால், இறவை பாசன நிலங்களின் பரப்பும் குறைந்து கொண்டே செல்கிறது. கால்நடை வளர்ப்பை உபதொழிலாக கொண்டுள்ளனர்.

தவிப்புமழைக்காலங்களில் மேய்ச்ல் நிலங்களில் கிடைக்கும் பசுந்தீவனங்கள் கால்நடைகளின் தீவனத்தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்து விடும். கூடுதல் தேவைக்கு தங்கள் நிலங்களில் கிடைக்கும் தீவனப்பொருட்களை இருப்பில் வைத்து ஆண்டு முழுவதும் யன்படுத்திக்கொள்வர். இந்தாண்டு ஏப்ரல் துவங்கும் முன்பே வெயிலின் அளவு உச்சத்திற்கு சென்றுள்ளது.

மேய்ச்சல் நிலங்கள் காய்ந்து வறண்டு விட்டது. பசுந்தீவனம் இல்லாத நிலையில் காய்ந்த சருகுகள் ஆடுகளின் தீவனமாகின்றன. நீர் நிலைகளும் வறண்டு விட்டன. இதனால் மேய்ச்சலுக்கு கொண்டு செல்லப்படும் கால்நடைகள் தீவனம், குடிநீர் கிடைக்காமல் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்பவர்கள் கூறியதாவது: கால்நடைகளை மேய்ச்சலுக்காக நீண்ட தூரம் கொண்டு செல்ல வேண்டி உள்ளது. குறிப்பிட்ட நேரத்தையும், இடத்தையும் இலக்காக வைத்து குடிநீர் மற்றும் தீவனத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டி உள்ளது. அவ்வாறு செல்லும் கால்நடைகளுக்கு ஒரு நாளைக்கு இரு முறையாவது போதுமான அளவு குடிநீர் கொடுக்க வேண்டும். மலை அடிவாரப்பகுதி, ஒரு சில கண்மாய் பகுதியில் தேங்கி உள்ள சிறிதளவு நீர் மட்டுமே தற்போது கைகொடுத்து வருகிறது. இன்னும் சில நாட்களில் கோடை

மழை பெய்தால்தான் கால்நடைகளுக்கான குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும் நிலை ஏற்பட்டுள்ளது,"என்றார்.

## கடற்பாசி கொள்முதல் நிலையம் எதிர்பார்ப்பு! ராமநாதபுரம் மீனவர்கள் ....

ராமநாதபுரம்:கடற்பாசியை வெளிமாநில வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்கிச் செல்வதை தடுக்க நெல் கொள்முதல் நிலையம் போல் கடற்பாசி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என, மீனவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கடல்சார் வளங்களில் குறிப்பிடத்தகுந்த வளமாக கடற்பாசி அமைந்துள்ளது. கீழக் கரையிலிருந்து தனுஷ்கோடி வரை கடல் பாசி அதிகமாக கிடைக்கிறது. கட்டக்கோரை என்னும் கடல் பாசியில் இருந்து பிரித்து எடுக்கப்படும் சோடியம் அல்ஜினேட், ஆடைகளின் வண்ணங்கள் மாறாமல் இருக்க பயன்படுத்தப்படுகிறது. மரிக் கொழுந்து மற்றும் கஞ்சி பாசியிலிருந்து தயாரிக்கப்படும் ஜெல்லி, உணவுகளில் அதிகப் படியாக பயன்படுகிறது. இந்த இயற்கை பாசியை எடுப்பதற்கு, நாட்டு படகில் மீனவர்கள் ஒரு குழுவாக சென்று, மிகுந்த சிரமத்திற்கு இடையே கடற்பாசி சேகரிக்கின்றனர். மீன்பாடு குறைந்து வரும் நிலையில், மாற்றுத்தொழிலாக கடற்பாசியை நம்பி உள்ள மீனவர்களிடம், வெளி மாநில வியாபாரிகள் ஒரு டன் ரூ.8,500க்கு வாங்கி செல்கின்றனர்.குறைந்த விலையை நிர்ணயம் செய்வதால், மீனவர்களுக்கு போதிய வருமானம் கிடைக்காமல், மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். இயற்கையாக கிடைக்கும் பாசியை செயற்கையாக தயாரிக்கும் யுக்தியை மண்டபம் மத்திய கடல்மீன் வள ஆராய்ச்சி நிறுவனம் அறிமுகம் செய்தது. ராமநாதபுரம் மாவட்டத்தில் செயற்கை முறை கடற்பாசி வளர்ப்பை லாபகரமாக நடத்தலாம், இதன்மூலம் புதிய வேலைவாய்ப்பு உருவாகும் என விஞ்ஞானிகள் கூறினர். செயற்கை முறை கடற்பாசி வளர்ப்பு தொழிலை, தனியார் பன்னாட்டு நிறுவனம் ஏகபோகமாக்கிவிட்டது. ராமநாதபுரம் மீனவர்கள் தினக்கூலியாக, கையேந்தி நிற்கும் நிலை உள்ளது. கடற்பாசி தயாரிப்பில் முன்னிலை பெற தமிழக அரசே கடற்பாசி வளர்ப்பிற்கு

பாரம்பரிய மீனவர்களுக்கு தேவையான உதவிகள் செய்ய வேண்டும். கடற்பாசியை அரசே நேரடியாக கொள்முதல் செய்வதன் மூலம் மீனவர்களின் துயரை போக்க முடியும்.

## கிணறுகளில் கம்பூசியா மீன்கள் விடும் பணி

ராமநாதபுரம்:ராமநாதபுரம் கிணறுகளில் வாழும் கொசு புழுக்களை அழிக்க கம்பூசியா மீன் விடும் பணியில் டெங்கு தடுப்பு பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ராமநாதபுரத்தில் நீர் நிலைகளில் கொசுக்கள் உற்பத்தியால் மலேரியா காய்ச்சல் பரவியது. இவை கிணறுகளில் இடுக்கில் முட்டையிடுகின்றன. கண்ணுக்கு புலனாகாத இவற்றை அழிக்க இயலாது. லார்வா நிலையில் புழுக்களாக வெளியேறும் கொசு புழுக்கள் அபேட் மருந்து மூலம் அழிக்கலாம். ராமநாதபுரம் நகராட்சி பகுதியில் உள்ள கிணறுகளில் லார்வா புழுக்களை இயற்கை முறையில் அழிக்க கம்பூசியா மீன்கள் விடும் பணியில் டெங்கு தடுப்பு பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மேற்பார்வையாளர் முகமது அனீஸ், துப்புரவு ஆய்வாளர் மதன் தலைமையில் பணியாளர்கள் 33 வார்டுகளில் உள்ள 2,800 கிணறுகளில் கம்பூசியா மீன் குஞ்சுகள் விட்டுள்ளனர்.

தினகரன்

### இன்றைய வேளாண் செய்திகள்

## மணிலா பயிரில் மகசூல் அதிகாரிகள் ஆய்வு

விருத்தாசலம், : விருத்தாசலம் அடுத்த கம்மாபுரம் வட்டாரத்தில் உள்ள கோட்டுமுளை, பெருந்துறை கிராமங்களில் உள்ள விவசாயிகள் மணிலா சாகுபடி அதிகம் செய்துள்ளனர். தற்போது மணிலா பயிர்கள் நன்கு விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

பொருளியியல் மற்றும் புள்ளியல் துறை சார்பில் மகசூல் குறித்து ஆய்வு

நடந்தது. கம்மாபுரம் வட்டார புள்ளியியல் ஆய்வாளர் லெனின், விருத்தாசலம் கோட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் இளங்கோவன் ஆகியோர் கொண்ட குழுவினர் கோட்டுமுளை, பெருந்துறை, ஒட்டிமேடு உட்பட கிராமங்களில் பயிர் செய்யப்பட்டிருந்த மணிலா பயிரில் விளைச்சல் குறித்தும், மகசூல் குறித்தும் ஆய்வு நடத்தினார்கள். ஆய்வின் போது உதவி வேளாண்மை அலுவலர்கள் சித்திராங்கி, தனசேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

## கோடை சீசனை முன்னிட்டு ஆதாம் நீருற்று சீரமைக்கும் பணி துவக்கம்

ஊட்டி, : கோடை சீசன் துவங்கியுள்ள நிலையில் பழமை வாய்ந்த ஆதாம் நீருற்று சீரமைக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.ஆண்டுதோறும் மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை கோடை சீசன் போது ஊட்டிக்கு அதிகளவு சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இவர்களை மகிழ்விக்கும் வகையில் மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி, பழக்கண்காட்சி, காய்கறி கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் நடத்தப்படும். அதேபோல், சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்கும் வகையில், சுற்றுலா தலங்கள் அனைத்தும் பொலிவுப்படுத்தப்படும்.

தற்போது ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா மற்றும் படகு இல்லம் உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா தலங்களும் பொலிவுப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், ஊட்டி சேரிங்கிராஸ் பகுதியில் உள்ள பழமை வாய்ந்த ஆதாம் நீருற்று சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இந்த நீருற்றுக்கு வர்ணம் பூசும் பணி மற்றும் தண்ணீர் சீராக செல்ல அனைத்து குழாய்களையும் பராமரிக்கும் பணி மேற்கொண்டு வருகின்றனர். இரவு நேரங்களில் மட்டுமே இந்த ஆதாம் நீருற்றில் தண்ணீர் திறக்கப்படும். தற்போது சீசன் துவங்கியுள்ள நிலையில், இதன் பராமரிப்பு பணி முடிந்தவுடன் சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்க பகல் நேரங்களிலும் அனுமதிக்க முடிவு செய்துள்ளனர்.

## அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் ஏக்கருக்கு 250 கிலோ முந்திரி அறுவடை

அரியலூர், : இந்திய அரசின் முந்திரி மற்றும் கோகோ வளர்ச்சி இயக்குனரகம் மற்றும் சோழன்மாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையம் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான முந்திரி சாகுபடி பற்றிய கருத்தரங்கம் பொன்பரப்பியில் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கருத்தரங்கின் துவக்கமாக கிரீடு வேளாண் அறிவியல் கோட்டக்கலை விஞ்ஞானி ராஜா ஜோஸ்லின் வரவேற்றார். கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் மூத்த விஞ்ஞானி அழகுகண்ணன் தலைமை வகித்தார். முனைவர் கெய்சர் லூர்துசாமி பேசுகையில் முந்திரி விவசாயிகள் குழுவாக ஒன்று சேர்ந்து விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்களை துவக்கி தொழில்நுட்பங்களை நன்கு தெரிந்து கொண்டு விளைபொருட்களை தரம் பிரித்து பதப்படுத்தி அதற்குண்டான விலையை தாங்களே நிர்ணயம் செய்து விற்பனை செய்து வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்.

முந்திரியில் ஜூலை மாதத்தில் கவாத்து செய்யும் முறை மற்றும் அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார். முந்திரிக்கு தேவையான உரத்தினை தேவையான அளவு தேவையான நேரத்தில் சரியாக கொடுக்க வேண்டும் என்றார். அரியலூர் மாவட்டத்தில் தற்போது முந்திரி விவசாயிகள் ஏக்கருக்கு 200 முதல் 250 கிலோ வரை முந்திரி அறுவடை செய்து வருகின்றனர்.முந்திரியில் புதிய தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் ஏக்கருக்கு சராசரியாக 800-1000 கிலோ வரை மகசூலை அதிகரிக்க முடியும்.

முந்திரி பயிருக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்து அடர் நடவுமுறை கடைபிடித்து (ஒரு ஏக்கருக்கு 200 கன்றுகள்) அதிக மகசூல் எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும் முந்திரியில் பயிறுவகை பயிர்களான உளுந்து, பாசி பயிறு, துவரை, தட்டை பயிறு போன்ற பயிர்களை ஊடுபயிராக பயிர் செய்து கூடுதல் வருமானம் மற்றும் மண் வளத்தையும் பெருக்கலாம் என்றும் மேலும் முந்திரியை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை இயற்கை முறையில் கட்டுப்படுத்த வேண்டும். மேலும் பயிர் வளர்ச்சி ஊக்கிகளான பஞ்சகாவ்யா, மண்புழு உரம், முட்டை கரைசல் மற்றும் மூலிகை பூச்சி விரட்டி தயாரித்தல் குறித்து செய்முறை விளக்கமும், முந்திரியில் உள்ள உயர் தொழில்நுட்பங்களை

விளக்கி கூறி விவசாயிகளின் சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் பதில் கூறி ஆலோசனை வழங்கினார்.

இதில் தோட்டக்கலை உதவி இயக்குனர் சிவக்குமார், தொழில் நுட்ப வல்லுனர் அசோக்குமார், கிரீடு வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை விஞ்ஞானி ராஜா ஜோஸ்லின், ராஜ்கலா பங்கேற்றனர். இக்கருத்தரங்கில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள 150 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

தினத்தந்தி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கம்மாபுரத்தில் மணிலா பயிரில் மகசூல் குறித்து அதிகாரிகள் ஆய்வு



கம்மாபுரம்,

கம்மாபுரத்தில் மணிலா பயிரில் மகசூல் குறித்து அதிகாரிகள் ஆய்வு நடத்தினர்.

<u>மணிலா பயிர்</u>

கம்மாபுரம் வட்டாரத்தில் உள்ள கிராமங்களில் விவசாயிகள் நெல், கரும்பு, மணிலா, உளுந்து மற்றும் மலர்வகை பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். கோட்டுமுளை, பெருந்துரை கிராமங்களில் மணிலா சாகுபடி அதிகம் நடைபெற்று வருகிறது.

தற்போது மணிலா பயிர்கள் நன்கு விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை சார்பில் மகசூல் குறித்து அதிகாரிகள் ஆய்வு நடத்துவது வழக்கம்.

அதன்படி, இந்த ஆண்டுக்கான மணிலா விளைச்சல் குறித்து அதிகாரிகள் நேற்று ஆய்வு நடத்தினர். கம்மாபுரம் வட்டார புள்ளியல் ஆய்வாளர் லெனின், விருத்தாசலம் கோட்ட புள்ளியியல் உதவி இயக்குனர் இளங்கோவன் ஆகியோர் கொண்ட குழுவினர் கோட்டுமுளை, பெருந்துரை, ஓட்டிமேடு உள்ளிட்ட கிராமங்களில் பயிர் செய்யப்பட்டிருந்த மணிலா பயிரை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் முடிவில் மணிலா இந்த ஆண்டு சுமாரான விளைச்சல் தான் அமைந்துள்ளன, மகசூலும் சுமாரான அளவில் தான் கிடைத்துள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர். ஆய்வின் போது உதவி வேளாண்மை அலுவலர்கள் சித்திராங்கி, தனசேகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## காரிமங்கலம் பகுதியில் முள்ளங்கி அறுவடை செய்யும் பணிகள் தீவிரம் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை



காரிமங்கலம்,

காரிமங்கலம் பகுதியில் முள்ளங்கி அறுவடை செய்யும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை

முள்ளங்கி சாகுபடி

விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் தக்காளி, வெண்டை, மிளகாய் கத்திரி, முள்ளங்கி உள்ளிட்ட காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் விளையும் காய்கறிகளுக்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. இதேபோன்று பூக்கள், மரவள்ளி உள்ளிட்டவைகளும் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன.

இந்தநிலையில் மாவட்டம் முழுவதும் முள்ளங்கி, தக்காளி, கத்திரி உள்ளிட்ட காய்கறிகள் விளைச்சல் அமோகமாக உள்ளது. காரிமங்கலம் அருகே உள்ள மண்ணாரிப்பட்டி பகுதியில் முள்ளங்கி அறுவடை செய்யும் பணி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. தோட்டத்தில் உள்ள முள்ளங்கியை விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் அறுவடை செய்து

தொட்டி அமைத்து அதில் கழுவி சுத்தம் செய்து மூட்டைகளாக கட்டி வாகனங்களில் விற்பனைக்காக சேலம், கோவை, பல்லடம், சென்னை மற்றும் முக்கிய நகரங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

விவசாயிகள் கவலை

இதுதொடர்பாக விவசாயிகள் கூறுகையில், தர்மபுரி மாவட்டத்தில் குறிப்பாக காரிமங்கலம், பாலக்கோடு மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் சுமார் 100–க்கும் மேற்பட்ட ஏக்கரில் முள்ளங்கி பயிரிடப்பட்டுள்ளது. இந்தாண்டு முள்ளங்கி விளைச்சல் நன்றாக உள்ளதால் தற்போது அறுவடை செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த பகுதியில் அறுவடை செய்யப்படும் முள்ளங்கி தமிழகம் மட்டும் அல்லாமல் கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1 கிலோ ரூ.10 வரை விற்பனை ஆகும் கால கட்டங்களில் விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கும்.

தற்போது முள்ளங்கி அறுவடை தொடங்கி உள்ள நிலையில் ஒரு கிலோ முள்ளங்கிக்கு ரூ.1.50 முதல் ரூ.2.50 வரை விற்பனையாகிறது. இவ்வாறு மிகக்குறைந்த விலைக்கு கேட்பதால் உற்பத்தி செலவு, அறுவடை செய்யும் கூலிக்கு கூட கட்டுப்பாடியாகவில்லை. இதனால் முள்ளங்கி பயிரிட்டுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். முள்ளங்கி அதிக விளைச்சல் காரணமாக விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கவலையுடன் தெரிவித்தனர்.

## நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 3,500 மூட்டை பருத்தி ரூ.60 லட்சத்துக்கு ஏலம்



நாமக்கல்,

நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 3 ஆயிரத்து 500 மூட்டை பருத்தி ரூ.60 லட்சத்துக்கு ஏலம் போனது.

பருத்தி ஏலம்

நாமக்கல் – திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 3,500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

ரூ.60 லட்சத்துக்கு விற்பனை

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.60 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 486 முதல் ரூ.4 ஆயிரத்து 855 வரையிலும், டி.சி.எச். ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 762 முதல் ரூ.6 ஆயிரத்து 489 வரையிலும், சுரபி ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 489 முதல் ரூ.5 ஆயிரத்து 249 வரையிலும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

## குன்னூரில் கடந்த 6 வாரங்களாக நடைபெற்ற ஏலங்களில் தேயிலைத்தூள் கிலோவுக்கு சராசரியாக ரூ.20 குறைந்து உள்ளது



குன்னூர்,

குன்னூரில் கடந்த 6 வாரங்களாக நடைபெற்ற ஏலங்களில் தேயிலைத்தூள் கிலோவுக்கு சராசரியாக ரூ.20 குறைந்து உள்ளதாக சர்வதேச மேலாண்மை ஆலோசகர் பி.எஸ்.சுந்தர் கூறினார்.

கருத்தரங்கம்

குன்னூரில் உள்ள கோத்தாரி வேளாண்மை மேலாண்மை மையம் சார்பில் தேயிலைத்தூளின் விலை நிலவரம் குறித்த கருத்தரங்கம் குன்னூரில் நேற்று நடைபெற்றது. கருத்தரங்கிற்கு மைய இயக்குனர் டாக்டர் அய்யங்கார் தலைமை தாங்கினார். இதில், சர்வதேச மேலாண்மை ஆலோசகர் பி.எஸ்.சுந்தர் கலந்து கொண்டு பேசியதாவது:–

குன்னூரில் உள்ள ஏல மையத்தில் கடந்த 2013–ம் ஆண்டிற்கு பிறகு முதல் முறையாக சராசரி விலையாக தேயிலைத்தூளின் கிலோ ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு மேல் இந்த ஆண்டு விலை கிடைத்து உள்ளது. ஆனால் கடந்த 6 வாரங்களாக நடைபெற்ற ஏலங்களில் தேயிலைத்தூள் கிலோவுக்கு சராசரியாக ரூ.20 குறைந்து உள்ளது.

விலை வீழ்ச்சி

கடந்த ஜனவரி மாதம் 29–ந் தேதி நடைபெற்ற விற்பனை எண் 4–க்கான ஏலத்தில் ஒரு கிலோ தேயிலைத்தூள் 102 ரூபாய் 88 பைசாவுக்கு விற்பனை விலையாக கிடைத்தது. இதனை தொடர்ந்து 6 வாரங்களாக தொடர்ச்சியாக 100 ரூபாய்க்கு மேல் விற்பனையாகி வந்தது. ஆனால் பிப்ரவரி மாதம் 19–ந் தேதி நடைபெற்ற 7–வது ஏலம் முதல் தேயிலைத்தூளுக்கு விலைவீழ்ச்சி ஏற்பட்டது. விற்பனை எண் 6–க்கான ஏலத்தில் 110 ரூபாய் 58 பைசாவாக இருந்த விலை கடந்த 24–ந் தேதி நடைபெற்ற 12–வது ஏலத்தில் 99 ரூபாய் 39 பைசாவாக குறைவடைந்தது.

உயர் ரக தேயிலைத்தூள் வழக்கமாக அதிக விலைக்கு விற்பனையாகும். ஆனால் இந்த ரக தேயிலைத்தூளுக்கும் தற்போது விலை வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. உயர் ரக தேயிலைத்தூள் கிலோவுக்கு 20 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விலை வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது.

வடஇந்தியாவில் உற்பத்தி அதிகரிப்பு

சாதாரண வகை தேயிலைத்தூள் கடந்த 6 வாரங்களுக்கு முன்பு கிலோ ஒன்று ரூ.100–க்கு ஏலம் போனது. ஆனால் தற்போது ரூ.60–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனை பார்க்கும் போது விற்பனை

அளவு கூடிவந்தாலும் விலையில் ஏற்றம் இல்லாமல் சரிந்து வருகிறது. விலையை குறைத்து விற்பனை செய்தால் மட்டுமே விற்பனையின் அளவை உயர்த்த முடியும் என்ற நிலை உள்ளது.

வடஇந்தியாவில் தற்போது பச்சை தேயிலை உற்பத்தி அதிகரித்து இருப்பதே விலைவீழ்ச்சிக்கு முக்கிய காரணம் ஆகும். இதனை கருத்தில் கொண்டு வர்த்தகர்கள் குன்னூர் ஏல மையத்தில் அதிக விலை கொடுத்து தேயிலைத்தூள் வாங்க ஆர்வம் காட்டுவது இல்லை. தேயிலைத்தூளுக்கு தேவை குறைவு என்பதால் விலை வீழ்ச்சி தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 3½ லட்சம் டன் நெல் கொள்முதல் ஒரத்தநாடு தாலுகா முதலிடம் பிடித்தது




தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 3½ லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரத்தநாடு தாலுகா முதலிடம் பிடித்தது.

நெற்களஞ்சியம்

காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இதில் தஞ்சை மாவட்டம் தமிழகத்தின் நெற்களஞ்சியமாகவும் விளங்கி வருகிறது. இந்த பகுதிகளில் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதை பொறுத்தே சாகுபடி பரப்பளவு அமையும்.

வழக்கமாக குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து ஜுன் மாதம் 12-ந்தேதி தண்ணீர் திறக்கப்படும். ஜனவரி மாதத்தில் மேட்டூர் அணை மூடப்படும். ஆனால் கடந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் அணை தாமதமாக திறக்கப்பட்டது. இதனால் குறுவை சாகுபடி எதிர்பார்த்த அளவு நடைபெறவில்லை.

3½ லட்சம் டன்

குறுவை சாகுபடி 33 ஆயிரத்து 625 எக்டேரில் நடைபெற்றது. இதனால் சம்பா, தாளடி சாகுபடியின் பரப்பளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் 1 லட்சத்து 27 ஆயிரத்து 534 எக்டேரில் சாகுபடி நடைபெற்றது. இதில் தற்போது சம்பா, தாளடி அறுவடை பணிகளும் முடிவடைந்து விட்டன.

தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. நெல்கொள்முதலில் நடப்பு ஆண்டு என்பது அக்டோபர் 1-ந்தேதி முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை ஆகும். தற்போது 1 குவிண்டால் சாதா ரகம் ரூ.1,460-க்கும், சன்னரகம் ரூ.1,520-க்கும் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் தற்போது வரை 3 லட்சத்து 45 ஆயிரத்து 415 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

432 கொள்முதல் நிலையங்கள்

இது குறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தஞ்சை மண்டல முதுநிலை மேலாளர் மணிமாறனிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:-

தஞ்சை மாவட்டத்தில் தற்போது 69 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. இந்த கொள்முதல் நிலையங்களுக்கு தற்போது சராசரியாக 2 ஆயிரத்து 500 டன் நெல் வருகிறது. இந்த ஆண்டு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தேவைப்படும் இடங்களில் நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் அதிக பட்சமாக 432 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டன. இந்த ஆண்டு தான் தஞ்சை மாவட்டத்தில் அதிக அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன.

ஒரத்தநாட்டில் அதிகம்

தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை, கும்பகோணம், பாபநாசம், திருவையாறு, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பூதலூர், ஒரத்தநாடு, திருவிடைமருதூர் ஆகிய 9 தாலுகாக்கள் உள்ளன. இதில் ஒரத்தநாடு தாலுகாவில் தான் அதிக அளவில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு தஞ்சை மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளது. மேலும் நடமாடும் கொள்முதல் நிலையங்கள் மூலமும் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி தற்போது 9 நடமாடும் நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் இதுவரை 1000 டன் வரை நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு முடிய இன்னும் 6 மாதங்கள் இருப்பதால் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் அளவுக்கு நெல் கொள்முதல் நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

## கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் வைக்கோல் கொள்முதலால் விலை உயர்வு



உத்தமபாளையம்,

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கேரள அரசு சார்பில் வைக்கோல் கொள்முதல் செய்யப்படுவதால் விலை உயர்ந்து வருகிறது.

நெல் விவசாயம்

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முல்லைப்பெரியாறு பாசனம் மூலம் இருபோக நெல் விவசாயம் நடந்து வருகிறது. தற்போது கம்பம், கூடலூர், சுருளிப்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, காமயகவுண்டன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 2–ம் போக நெல் அறுவடை பணிகள் முடிவடைந்துள்ளது. அதே நேரத்தில் உத்தமபாளையம், ராயப்பன்பட்டி, குச்சனூர், கோட்டூர், வீராபாண்டி, சின்னமனூர் உள்ளிட்ட பகுதிகளில் நெல் அறுவடை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியை பொறுத்தவரை கால்நடை வளர்ப்பவர்களுக்கு இயற்கையாகவே கூடுதலாக தீவனம் கிடைப்பதால் வைக்கோல் வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டமாட்டார்கள்.

விலை உயர்வு

இதனால் வைக்கோலுக்கு கூடுதல் விலை கிடைப்பது இல்லை. குறிப்பாக ஒரு ஏக்கர் வைக்கோல் ரூ.900–க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது வெளி மாவட்டத்தை சேர்ந்த வியாபாரிகள் மற்றும் கேரள வியாபாரிகள் இங்கு வந்து வைக்கோலை மொத்தமாக கொள்முதல் செய்வதால் வைக்கோல் விலை திடீரென உயர்ந்துள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது, தற்போது கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் வெளி மாவட்ட வியாபாரிகள் மற்றும் கேரளா அரசு வைக்கோல் கொள்முதல் செய்வதால் விலை திடீரென உயர்வு ஏற்பட்டுள்ளது. இதனால் ஒரு ஏக்கர் வைக்கோல் ரூ.1500 க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம் ஒரு ஏக்கர் வைக்கோல் ரூ.900–க்கு விற்பனை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது, என்றனர்.

## கிருஷ்ணா கால்வாயில் மதகுகள் அமைக்கும் பணி நிறைவு



ஊத்துக்கோட்டை,

கிருஷ்ணா கால்வாயில் மதகுகள் அமைக்கும் பணி நிறைவு பெற்றன.

நீர்த்தேக்கம்

பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் ஏரிகளில் சேமித்து வைக்கப்படும் தண்ணீரை கொண்டுதான் தற்போது சென்னை நகர மக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. இந்த ஏரிகளில் சேமித்து வைக்கப்படும் தண்ணீர் சென்னையில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு போதுமானதாக இல்லை. இதை கருத்தில் கொண்டு முதல்–அமைச்சர் ஜெயலலிதா ஊத்துக்கோட்டை அருகே உள்ள தேர்வாய்கண்டிகை மற்றும் கண்ணன்கோட்டையில் உள்ள ஏரிகளை ஒன்றிணைத்து ரூ.330 கோடி செலவில் நீர்த்தேக்கம் அமைக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்தார்.

இந்த திட்டத்தின்படி கண்ணன்கோட்டையில் நீர்த்தேக்கம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

<u>மதகுகள் அமைக்கும் பணி</u>

இந்த நிலையில் கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு செல்லும் கிருஷ்ணா நதி நீரை கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத்துக்கு கொண்டு செல்ல திட்டமிடப்பட்டது. இதையடுத்து கண்ணன்கோட்டை நீர்த்தேக்கத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல ஏதுவாக ஊத்துக்கோட்டை அருகே உள்ள தாமரைப்பாக்கம் கிராம எல்லையில் 2 மதகுகள் அமைக்கும் பணி நடந்தது. பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் மாதவன் மேற்பார்வையில் இந்த பணிகள் நடைபெற்றன. இந்த மதகுகள் வழியாக 13 கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் கடந்து செல்ல சிறு பாலம் அமைக்கும் பணிகளும் நேற்று நிறைவடைந்தன.

இந்த பணிகள் முடிவடைந்ததால் இங்கிருந்து கண்ணன்கோட்டை நீர்த்தேக்கம் வரை கால்வாய் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்க உள்ளதாக பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் மாதவன் தெரிவித்தார்.